[2nd April 1958

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. The owner of one of the sites proposed to be acquired raised certain objections. These objections have been considered and orders have since been passed. The acquisition will now be proceeded with.

Director of Agriculture

* 519 *Q*.—SRI V. SUBBIAH : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have considered at any time the question of appointing a specialist in agriculture as to the Director of Agriculture; and

(*b*) if so, the decision taken on the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Government have decided that the post of Director of Agriculture, Madras, should be held by an officer belonging to the Indian Administrative Service.

SRI V. SUBBIAH : விவசாய துறையில் டைரக்டராக இருக்கக் கூடியவர் விவசாயத் துறையிலே அனுபவமுள்ள விவசாயத் துறை பட்டதாரியாக இருந்தால், நிர்வாகம் சிக்கல் இல்லாமல் சுமுகமாக நடை பெற முடியும். அந்த நிலையிலே விவசாயத் துறை டைரக்டர் பதவிக்கு ஒரு பட்டதாரியை நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாயப் பட்ட தாரிகள் இந்தப் பதவிக்கு லாயக்கு உள்ளவர்களாக இருந்தால் அவர்களை இந்தப் பதவிக்கு நியமிப்பதும் கருதப்படும். ஆனல் இப்பொழுது மற்ற நிபுணர்களெல்லாம் விவசாய பட்டதாரிகளாக இருக்கிறார்கள். ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீஸர் டைரக்டராக இருப்பதால் ஒன்றும் சிக்கல் இல்லை.

Indo-American Technical Assistance Programme

* 520 *Q*.—SRI V. S. MANICKASUNDARAM (on behalf of Sri P. G. Manickam) : Will the Hon. the Minister for Home be pleased to state the names of the agricultural leaders selected for touring the United States of America in 1958 under Indo-American Technical Assistance Programme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The selection is made by the Government of India who have not yet announced the names of those selected by them.

SRI A. V. P. ASAITHAMBI : மத்திய சர்க்கார் இன்னும் இதற்கான பெயர்களை அறிவிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற காரணத்தினலே, இந்தக் குடியானத் தலைவர்களோடு சர்வ கட்சி பிரதிநிதிகளையும் அனுப்பி வைத்தால் இந்தத் தொழில் நுட்பத்தை நன்கு கற்க வசதியாக இருக்கும் அல்லவா ? அதற்கான சிபார்சுகளை சர்க்கார் செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே கட்சி விஷயம் ஒன்றுமில்லை. இருநூறுக்கு மேற்பட்டவர்கள் இதற்காக மனு போட்டார்கள். இதில் ஒன்பது பேர்கள் கொண்ட ஒரு ''பானலை'' மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம். அதையும் வைத்துக் கொண்டு வேறு ஏதாவது அவர்களிடம் மனுக்கள் இருந்தால் அவைகளையும் பரிசீலனை செய்து அவர்கள் முடிவு செய்யவேண்டும்.